**கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2011 செப்தெம்பர் 01 தொடக்கம் திசெம்பர் 31 வரை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 1.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2011 செப்தெம்பர் 01 முதல் திசெம்பர் 31 வரையான முதவாவது கணக்கீட்டு காலத்திற்காக முறையான கணக்கீட்டு பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்ததென்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 52.28 மில்லியன் தொகையான நிதிகள் வெளிநாட்டு

மூலங்களிலிருந்து பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகள் ரூபா 19.38 மில்லியன் ஆகும். ரூபா 32.90 மில்லியன் வித்தியாசங்களை இணக்கம் செய்வதற்கும் அதன்படி கணக்குகளில் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தெம்பர் 23 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 யூலை 26 ஆம் திகதிய 05 இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வழமை போல, அரச கொள்வனவு வழிகாட்டலின் 5.4.12 ஆம் பந்தி, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு பெறுமதி சேர் வரி கொடுப்பனவுகள் மீதான மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு காலப்பகுதியின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் மொத்தக் கொடுப்பனவுகள் ரூபா 2.1 மில்லியனாக இருந்தது.

(ஈ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேல் ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் பொது ஒப்பந்த பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் கேள்வி உடன்படிக்கை பொது ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்யப்பட வேண்டும். இந்த வேண்டுகைகள் செயற்திட்ட செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஒப்பந்தகாரர்களுடன் இணங்கியிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தால் அவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 2.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வு காலத்திற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வின் முதலாவது கணக்கீட்டு காலப்பகுதியின் போது நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | முதலாவது கணக்கீட்டு காலப்பகுதியின் போது பயன்படுத்திய தொகை | |
|---|---|---|---|---|---|
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 14,087 | 17,922 | 500 | 14.00 | 19.4 |
| இலங்கை அரசாங்கம் | 3,191 | 4,060 | 130 | 22.51 | 31.2 |
| மொத்தம் | 17,278 | 21,982 | 630 | 36.51 | 50.6 |

பட்டியல்படுத்தப்பட்ட செயற்திட்ட காலப்பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதனை உறுதிப்படுத்துவதற்கு முழுச் செயற்திட்ட காலப்பகுதியை மேவுகின்ற மாதாந்தம், காலாண்டு மற்றும் வருடாந்தம் போன்ற பொறுப்புக்களை நிர்ணயிப்பதுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டி பட்டியலிடப்பட்ட விபரமான விரிவான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும், அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வு காலப்பகுதியின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 2.55 சதவீதம் மற்றும் 2.80 சதவீதமாக இருந்தது.

**2.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 செப்தெம்பரில் முடிவுறுத்தப்பட்டிருந்த கண்டி நகர கழிவு நீர் அகற்றல் செயற்திட்டம் என அழைக்கப்பட்ட வேறொரு செயற்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பொறுப்புகளை தீர்ப்பதற்கு செயற்திட்டத்தால் ரூபா 19.4 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் சம்பள செலவினத்தின் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. எவ்வாறாயினும், மீளாய்வு காலப்பகுதியின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வறான மேந்தலை செலவினம் ரூபா 2.5 மில்லியனாகும்.